## வகுப்பு - 8 - வரலாறு, 1. ஐரோப்பியர்கள் வருகை

**பயிற்சி வினாக்கள்:**

1. இந்தியாவின் செல்வ வளத்தை ஐரோப்பியர் ______ குறிப்புகள் மூலம் அறிந்தனர்.

   (1) யுவான்சுவாங் (2) மார்க்கோபோலோ

   (3) மெகஸ்தனிஸ் (4) பதுதா

2. ஆனந்தரங்கம் குறிப்புகள் மூலம் அறிவது ______.

   (1) இந்திய - அரேபியா உறவுமுறை (2) இந்திய - சீனா உறவுமுறை

   (3) இந்திய - பிரெஞ்சு உறவுமுறை (4) இந்திய - ஐரோப்பிய உறவுமுறை

3. பின்வருவனவற்றுள் எவை எழுதப்பட்ட ஆதாரங்கள் அல்ல?

   (1) சுயசரிதைகள் (2) இலக்கியங்கள் (3) நாட்குறிப்புகள் (4) சிற்பங்கள்

4. ஆசியாவிலேயே மிகப்பெரிய ஆவணக் காப்பகம் ______ ல் உள்ளது.

   (1) புதுடெல்லி (2) சென்னை (3) சீனா (4) ரஷ்யா

5. பொருத்துக.

   i. ஆனந்தரங்கம் - a. இந்திய ஆவணக் காப்பகத்தின் தந்தை

   ii. ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் - b. சென்னை நாட்குறிப்புப் பதிவுகள்

   iii. டாட்வெல் - c. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

   iv. சென்னைப் பதிப்பாசனம் - d. மொழிபெயர்ப்பாளர்

   (1) i - d ii - c iii - b iv - a (2) i - d ii - a iii - b iv - c

   (3) i - d ii - a iii - c iv - b (4) i - d ii - c iii - a iv - b

6. கூற்று: நமது கலாச்சாரத்தைப் பாதுகாப்பவை அருங்காட்சியகங்கள்.

   காரணம்: சமய, கலாச்சார, வரலாற்று மதிப்புமிக்க பொருட்கள் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

LIVEWORKSHEETS

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி

(3) கூற்று காரணம் இரண்டுமே சரி (4) கூற்று காரணம் இரண்டுமே தவறு.

7. டெல்லி அருங்காட்சியகம் நிறுவப்பட்ட ஆண்டு ______.

(1) 1948 (2) 1949 (3) 1950 (4) 1951

8. நிர்வாக வரலாற்றை அறிய உதவுபவை ______.

(1) நாணயங்கள் (2) சிற்பங்கள் (3) கோவில்கள் (4) உடைகள்

9. 1938 இல் ரிசர்வ் வங்கி வெளியிட்ட 5 ரூபாய் நோட்டில் யாருடைய உருவம் இடம்பெற்றிருந்தது?

(1) தேசியச் சின்னம் (2) ஏழாம் எட்வர்டு

(3) மகாத்மா காந்தியடிகள் (4) ஆறாம் ஜார்ஜ்

10. கூற்று: போர்ச்சுக்கீசிய இளவரசர், மாலுமி ஹென்றி என அழைக்கப்பட்டார்.

காரணம்: ஏனெனில் அவர் மாலுமியாகப் பணியாற்றினார்.

(1) கூற்று, காரணம் இரண்டும் சரி (2) கூற்று, காரணம் இரண்டும் தவறு

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

11. 1487 இல் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை வந்தடைந்தவர் ______

(1) பார்த்தலோமியோ டயஸ் (2) வாஸ்கோடகாமா

(3) சாமரின் (4) காப்ரில்

12. போர்ச்சுக்கீசியரின் முதல் தலைநகரம் ______.

(1) கண்ணனூர் (2) கொச்சின் (3) கோவா (4) பழவேற்காடு

13. முதல் போர்ச்சுக்கீசிய ஆளுநர் ______.

(1) பிரான்சிஸ்கோ - டி - அல்மெய்டா (2) அல்போன்சோ - டி - அல்புகர்க்

(3) நினோ - டி - குன்கா (4) நிக்கோலஸ்

14. இந்திய மருத்துவத் தாவரங்கள் என்னும் நூல் வெளியிடப்பட்ட ஆண்டு ______.

LIVEWORKSHEETS

(1) 1556 (2) 1563 (3) 1602 (4) 1560

15. நினோ - டி - குன்கா போர்ச்சுகீசியத் தலைநகரை _______ லிருந்து _______ க்கு மாற்றினார்.

(1) கொச்சி, கோவா (2) கோவா, கொச்சி

(3) கோவா, டெல்லி (4) கொச்சி, டெல்லி

16. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கால வரிசைப்படி (ஏறுவரிசைப்படி) அமைத்தால், சரியான வரிசை எது?

(1) பெடரா போர்

(2) நெதர்லாந்து கிழக்கிந்தியக் கம்பெனி தொடக்கம்

(3) அம்பாய்னா படுகொலை

(4) வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்

(1) 1, 2, 3, 4 (2) 4, 3, 2, 1 (3) 4, 2, 3, 1 (4) 4, 2, 1, 3

17. டச்சுக்காரர்களால் வர்த்தகம் செய்யப்படாத பொருட்கள் எது?

(1) அபினி (2) பருத்தி (3) அரிசி (4) மிளகாய்

18. கெல்டிரியா கோட்டை _______ இன் அதிகார மையமாக இருந்தது.

(1) டச்சுக்காரர் (2) போர்ச்சுக்கீசியர் (3) ஆங்கிலேயர் (4) டேனியர்

19. சர் தாமஸ் ரோவை இந்தியாவிற்கு அனுப்பியவர் _______.

(1) இராணி எலிசபெத் (2) மன்னர் ஜேம்ஸ் (3) ஜார்ஜ் (4) வில்லியம்

20. பொருந்தாததைக் கண்டறிக.

(1) ஆக்ரா (2) அகமதாபாத் (3) புரோச் (4) பழவேற்காடு

21. பொருந்தாததைக் கண்டறிக.

(1) பம்பாய் (2) சௌளல் (3) பசீன் (4) கடலூர்

22. பொருந்தாததைக் கண்டறிக.

LIVEWORKSHEETS

(1) சூரத் (2) பரங்கிப்பேட்டை (3) பாண்டிச்சேரி (4) மாஹி

23. பொருந்தாததைக் கண்டறிக.

(1) கால்பர்ட் (2) சீகன் பால்கு

(3) பிரான்காய்ஸ் கோரன் (4) மார்காரா

24. தவறான இணையைக் கண்டறி

(1) புனித ஜார்ஜ் கோட்டை - சென்னை

(2) புனித பிரான்சிஸ் ஆலயம் - கொச்சி

(3) புனித வில்லியம் கோட்டை - சுதாநுதி

(4) டேனியர்களின் தலைநகர் - தரங்கம்பாடி

25. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(1) பிளாசிப் போர் - 1764

(2) பக்சார் போர் - 1757

(3) டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி - கால்பர்ட்

(4) சுதாநுதி வர்த்தக மையம் - ஜாப் சார்னாக்

26. கோல்கொண்டா அரசின் துறைமுகம் ______.

(1) சென்னை (2) விசாகப்பட்டினம்

(3) மசூலிப்பட்டினம் (4) கொச்சி

27. சென்னப்ப நாயக்கரிடமிருந்து மெட்ராஸைக் குத்தகையாகப் பெற்றவர் ______.

(1) பிரான்சிஸ் டே (2) ரிப்பன் (3) சார்லஸ் (4) ஜார்ஜ்

28. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகீசிய மன்னரிடமிருந்து திருமணச் சீராகப் பெற்ற பகுதி ______.

(1) சென்னை (2) பம்பாய் (3) கொல்கத்தா (4) டெல்லி

29. வங்காளத்தின் முகலாய ஆளுநர் ______.

LIVEWORKSHEETS

(1) ட்யூப்ளே (2) மார்ட்டின் (3) செயிஸ்டகான் (4) அப்சல் கான்

30. கூற்று 1: மூன்று கார்நாடகப் போர்கள் பிரெஞ்சுகாரர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் இடையே நடைபெற்றன.

கூற்று 2: கர்நாடகப் போர்கள் பிரான்ஸை நலிவடையச் செய்தன.

(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 1 தவறு, 2 சரி

(3) கூற்று 1 மற்றும் 2 சரி (4) கூற்று 1 மற்றும் 2 தவறு

31. _______ ல் _______ கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவியவர் ஜோதன்பர்க்.

(1) 1731, சுவீடன் (2) 1731, டச்சு (3) 1713, டச்சு (4) 1700, சுவீடன்

32. பொருத்துக.

1) அச்சுக் கூடம் - A. ட்யூப்ளே

2) பதினான்காம் லூயியின் அமைச்சர் - B. பிரான்காய்ஸ் மார்ட்டின்

3) செயின்ட் லூயிஸ் கோட்டை - C. சீகன் பால்கு

4) பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆளுநர் - D. கால்பர்ட்

(1) 1 - C 2 - D 3 - A 4 - B (2) 1 - C 2 - D 3 - B 4 - A

(3) 1 - C 2 - A 3 - D 4 - B (4) 1 - D 2 - C 3 - B 4 - A

33. இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?

(1) வாஸ்கோடகாமா (2) பார்த்தலோமியோ டயஸ்

(3) அல்போன்சோ-டி-அல்புகர்க் (4) அல்மெய்டா

34. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்ததில் முதன்மையாக இருந்த நாடு எது?

(1) நெதர்லாந்து (டச்சு) (2) போர்ச்சுகல் (3) பிரான்ஸ் (4) பிரிட்டன்

35. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

(1) பிரான்ஸ் (2) துருக்கி (3) நெதர்லாந்து (டச்சு) (4) பிரிட்டன்

LIVEWORKSHEETS